உ. புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முனவடிவு 1980.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்* என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றுப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முமவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1980) நிறைவேற்றப் பெறவேண்டும்" * என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று. சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊ. பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் நிவாரண) சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை "சட்ட முன்வடிவு 0/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

---

* 1980, பிப்ரவரி 5 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசித ல் அச்சிடப்பெற்றுள்ளது.

1980 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பிரிவுகள் 2 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

[பிற்பகல் 2-00]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு 10/1980) நிறைவேற்ற பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

எ. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு 1980).

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1980) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடபெற்றுநிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாகஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பெற்றது

பிரிவுகள் 2 முதல் 13 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1980) நிறைவேற்றவேண்டும், என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1980 பிப்ரவரி 7-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.